# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கோலாகலமாக நடைபெற்ற

# திருச்செந்தூர் திருமுருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழா!

## சட்டம் – ஒழுங்கைப் பறைசாற்றும் முத்திரை விழா!

**சென்னை, ஜூலை 9-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கோலாகலமாக நடைபெற்ற திருச்செந்தூர் திருமுருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழா, எங்கும் எந்தவொரு பிரச்சினையும் இல்லாத வெற்றி விழா, திராவிட மாடல் அரசின் சட்டம் ஒழுங்கைப் பறைசாற்றும் ஒரு முத்திரை விழாவாக நடைபெற்றது.**

தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் திருமுருகப் பெருமானுக்குத் தமிழ்நாட்டில் ஆறுபடை வீடுகள் உள்ளன. அவற்றுள் இரண்டாம் படை வீடு திருச்செந்தூர் திருக்கோயில்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன், திருச்செந்தூர் திருக்கோயிலில் குடமுழுக்கு விழா 7.7.2025 திங்கள்கிழமை காலை 6.50 மணியளவில் கோலாகலமாக நடைபெற்றது. இந்த குடமுழுக்குவிழா தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மீன்வளத்துறை அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் தமிழ் மறைகள் முழுங்கிட தருமபுர ஆதினம், மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சாமிகள், சிருங்கேரி சாரதா பீடாதிபதி சாமிகள் முதலானோர் சூழ வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருச்செந்தூரின் கடலோரத்தில் கூடிய கூட்டம் தலையா, கடல் அலையா என ஒரு திரைப்படத்தில் வரும் பாடல் வரிகள் தமிழ்நாட்டின் மூலை முடுக்கில் எல்லாம் பல ஆண்டுகளாக முழங்கி வருவதை எவரும் மறந்திட முடியாது.



திருச்செந்தூர் முருகன்கோயில் கும்பாபிஷேகத்தில் லட்சக்கணக்கில் திரண்ட மக்கள்!

அந்த அளவுக்கு திருச்செந்தூர் கோயிலைச் சூழ்ந்த நாற்புறங்களிலும், கடலோரத்தில் மணலே தெரியாத அளவுக்கு இலட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்த காட்சிகளை அங்கிருந்தவர்கள் மட்டுமல்ல, தொலைக்காட்சி வழியாக குடமுழுக்கு விழாவைப் பார்த்து மகிழ்ந்த மக்கள் அனைவரும் கண்டு மகிழ்ச்சியில் திளைத்தனர்.

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழாவை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின்படி, அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால், அறநிலையத்துறை அதிகாரிகளின் துணையோடு திருச்செந்தூரிலேயே முகாமிட்டு நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதிலுமிருந்து வருகைபுரிந்த இறையன்பர்கள் எல்லோரும் குடமுழுக்கு விழாவைக் கண்டு மனநிறைவோடு - மகிழ்ச்சியோடு ஊர் திரும்பியுள்ளனர்.

திருச்செந்தூர் குடமுழுக்கு விழாவிற்காக திராவிட மாடல் அரசின் அருமையான முன்னேற்பாடுகளை குறிப்பாக அனைத்து மாநிலங்களிலிருந்தும் சிறப்புப் பேருந்து வசதிகள், தங்குமிட வசதிகள், திரும்பிய இடமெல்லாம் அன்னதானங்கள் என அனைத்தையும் கண்டு மகிழ்ந்த பொது மக்கள் மலைத்துப்போய் தமிழ்நாடு அரசையும், முதலமைச்சர் அவர்களையும் பாராட்டினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்செந்தூர் குடமுழுக்கு விழாவிற்கு வருகைதந்த பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரிடம் தேவையான வசதிகளைச் செய்துதர அறிவுரைகள் வழங்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள், மாநில அளவிலான சிறப்புப் பொதுக் கூட்டங்கள் என எது நடத்தினாலும், வருகை புரிந்த தொண்டர்கள் அனைவரின் நலனிலும் தனிக்கவனம் செலுத்துவார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நிகழ்ச்சிக்காக வருகை புரிந்தவர்களை நோக்கி, நீங்கள் அத்துணை பேரும் பத்திரமாக உங்கள் ஊருக்கும், வீடுகளுக்கும் திரும்பிச் சென்றுவிட்டீர்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்த பிறகுதான் நான் நிம்மதி அடைவேன் என்று கூறுவார்கள்.

அதுபோலவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழாவைக் காண வந்த மக்கள் அனைவரும் பத்திரமாகத் திரும்பி ஊர் சென்று அவரவர் வீடுகளைச் சென்றடைவதற்குத் தேவையான வசதிகளைச் செய்திட உத்தரவு பிறப்பித்தார்கள்.

அந்த உத்தரவை தலைமேற்கொண்டு அமைச்சர் பெருமக்களும், மாவட்ட நிர்வாகமும், காவல்துறை அதிகாரிகளும் இரவு பகல் பாராமல் முறையாகத் திட்டமிட்டு, குடமுழுக்கு விழாவை மிக மிகச் சிறப்பாக நடத்தி முடித்துள்ளார்கள். எந்த இடத்திலும் மக்கள் சிரமப்பட வில்லை.

திருச்செந்தூர் குடமுழுக்கு விழாவிற்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைபுரிந்த ஏறத்தாழ 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் குடமுழுக்கு விழாவில் பங்கேற்று பக்திப் பரவசத்துடன் தங்கள்தங்கள் ஊர்களுக்கும் வீடுகளுக்கும் சென்று சேர்ந்துள்ளார்கள்.

இலட்சக் கணக்கான மக்கள் கூடிய திருச்செந்தூர் திருமுருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழாவுடன், வடபுலத்தில் நடைபெற்ற கும்பமேளாவை ஒப்பிட்டால், அப்பப்பா, எத்தனை எத்தனை பேர் அங்கு மடிந்தனர். எவ்வளவு பெரிய தீ விபத்துகள் அங்கே நிகழ்ந்தன. எவ்வளவு குடும்பங்கள் அங்கே பாதிக்கப்பட்டன. கும்பமேளாவிற்கு வருகைதந்த மக்கள் டெல்லி உட்பட பல இரயில் நிலையங்களில் எவ்வளவு பிரச்சினைகளைச் சந்தித்தனர். எத்தனை கொடுமைகள் நிகழ்ந்தன.

அவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, எத்தனை இலட்சம் பேர் வந்தால் என்ன, அவர்கள்அத்துனை பேரின் நலன்களையும் பாதுகாப்பையும் உறுதி செய்து, நன்கு திட்டமிட்டு, திருச்செந்தூர் திருமுருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழாவை மக்கள் பாராட்டும் வகையில் நடத்தி வெற்றி கண்டுள்ள திராவிட மாடல் அரசின் நாயகரும், அவரது அமைச்சர்கள், அதிகாரிகள் முதலானோரும் என்றும் எல்லோருக்கும் முன்னோடிகள் அல்லவா!

---

### விஜயகுமார் தலைமை! வேளாண் - உழவர் நலத்துறை சார்பில் - செஞ்சி ஒன்றியம் -

## ஜம்போதியில் காய்கறி விதை தொகுப்புகள் - பழச்செடிகள்!

### முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, ஜூலை 9 -

செஞ்சி ஒன்றியம் ஜம்போதி ஊராட்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விவசாயிகளுக்கு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில்காய்கறி விதை தொகுப்புகள், பழச் செடிகளை வழங்கினார்

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் இன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஜம்போதி ஊராட்சியில் செஞ்சி வட்டார தோட்டக்கலை துறை சார்பில் விவசாய பயனாளிகளுக்கு காய்கறி விதை தொகுப்புகள் மற்றும் பழச் செடிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்தி முன்னிலை வகித்தார்.

செஞ்சி வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சுதந்தி அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் செய்துள்ள பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார்.

இதைத் தொடர்ந்து தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாய பயனாளிகளுக்கு காய்கறி விலை தொகுப்புகள் மற்றும் பழச் செடிகளை அவர் வழங்கினார்.

இதில் செஞ்சி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுஜாதா ஊராட்சி மன்ற தலைவர்அழகேசன், துணை வேளாண்மை அலுவலர் ஶ்ரீதர், வேளாண்மை பொறியாளர் அமரன், உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெய்கணேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஏழுமலை,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பொற்கலை, ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை, துணை செயலாளர் செல்வமணி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி, நிர்வாகிகள் கமலக்கண்ணன், ஜானகிராமன், சந்திரசேகர், செந்தாமரை, வடிவேல், மாரி, காமராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தோட்டக்கலை அலுவலர் பிரகாஷ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

---




கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., நீலிக்கோலம்பாளையம் பகுதி மற்றும் இளைஞர் அணி சார்பில் 54 வது வட்டம், துளசியம்மாள் லே அவுட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா, திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகள் விளக்க தெருமுனைக் கூட்டம் சிங்காநல்லூர் பகுதி 2 இளைஞர் அணி அமைப்பாளர் வே.மனோஜ்குமார் தலைமையில் துணை அமைப்பாளர் ச.யுவராஜ் வரவேற்புரையில் பகுதி கழகப் பொறுப்பாளர் சிங்கை அன்பு (எ) ப.அன்பழகன், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர்கள் கே.பி.திருமலைராஜா, க.மணிகண்டன், லாரா பிரேம் தேவ், கோவை அருண், துரை பிரவீன்குமார், சி.எம்.எஸ்.மசூது, வட்டக் கழகச் செயலாளர் க.ஆனந்த்குமார், பகுதி துணை அமைப்பாளர்கள் மு.கார்த்திக், நீ.பா.தயாநிதி, ஜெ.ஹரி பாலாஜி, மு.முத்துராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கோவை சம்பத், இலயோலா ராஜசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாநகர் மாவட்ட, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---




## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கன்னியாகுமரி கிழக்கு மற்றும் கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 12.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | கன்னியாகுமரி கிழக்கு | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 3.00 மணி | கன்னியாகுமரி மேற்கு | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்கிளம்பி. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு மற்றும் திருநெல்வேலி கிழக்கு ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | நாகர்கோவில் | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 4.00 மணி | பத்மநாபபுரம் | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மகால், வள்ளியூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 07.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி